## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,

## கிருஷ்ணகிரி மாவட்டம்.

அசல் வழக்கு எண். 112/2013 நாள்: 05 .11.2019

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.2 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன், பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

பெயர் : ரேணு

தந்தை பெயர் : சின்னசாமி கவுண்டர்

கிராமம் : தாலுக்கா :

வயது : வேலை :

**4-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

மாணிக்கத்திற்கு எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்துக்கள் எந்த வகையில் கிடைக்கப்பெற்றது என்று எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண் அளவுகள் தெரியாது, அது பூர்வீக சொத்தாகும். எவ்வளவு சொத்து உள்ளது என்ற எனக்கு தெரியாதா என்றால் மாணிக்கம் விற்றது 1 ¾ ஏக்கர் என்பது தெரியும், மொத்தம் எவ்வளவு ஏக்கர் உள்ளது எனக்கு தெரியாது. மாணிக்கம் விலைக்கு ஏதாவது சொத்து வாங்கினாரா என்றால் விலைக்கு வாங்கினாரா என்று எனக்கு தெரியாது அவர் அப்பாவைத்திருந்த சொத்துதான் அவருக்கு கிடைத்தது. மாணிக்கத்திற்கு கல்லூர் கிராமத்தில் இருந்து வந்த மளிகை கடையை கிரையம் கொடுத்துவிட்டாரா என்றால் இல்லை, அவர் மகளுக்கு கொடுத்துவிட்டார் அவர் மகளும் கிரையமாக பெறவில்லை, அவர் அதனை வைத்து நடத்தி வருகிறார். மாணிக்கம் மளிகை கடையை எவ்வளவு தொகைக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் , அதெல்லாம் எனக்கு தெரியாது. மாணிக்கத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் திருமால் வேலு என்ற இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர், மகன்கள் இருவரும் தனித்தனியாக வசித்து வருகிறார்கள். அவர்கள் இருவரும் எத்தனை வருடமாக தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. மாணிக்கம் முதல் திருமணம் யாரை, எப்போது செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மாணிக்கம் எனக்கு என்ன உறவு என்றால் எனது பெரியம்மா மகன் உறவு ஆகும்.

மாணிக்கத்திற்கு எத்தனை ஆண்டுகள் கழித்து குழந்தை பிறந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சாந்தி அவருக்கு முதல் வாரிசு அது மட்டும் தெரியும். வேலு திருமால் ஆகியோரின் அம்மா பெயர் எனக்கு தெரியுமா என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. பச்சையம்மாள் என்பவர் மாணிக்கத்தின் மனைவி என்றாலும், மாணிக்கம் பச்சையம்மாளுக்கு பிறந்நதவர்கள்தான் வேலு, திருமால் என்றாலும் அவர்கள் இருவர் தான் மாணிக்கத்திற்கு சட்டப்படியாக வாரிசுகள் என்றால் இருக்கலாம் அது எனக்கு தெரியாது. சாந்தியின் தாயார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சந்திரமதி என்பவருக்கும், வேறு ஒருவருக்கும் இருந்த தகாத உறவினால் பிறந்த நபர்தான் சாந்தி என்றால் சரியல்ல. மாணிக்கத்தின் மகள்தான் சாந்தி ஆவார். சந்திரமதி என்பவருக்கும், வேறு ஒருவருக்கும் இருந்த தகாத உறவினால் பிறந்த நபர்தான் சாந்தி என்பதால் சாந்தி இந்த வழக்கில் அவர் கோரியுள்ள பரிகாரம் எதுவும் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வேலு, திருமால் ஆகியோரின் தாயார் பச்சையம்மாள் எப்போது இறந்தார் என்றால் தோராயமாக சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு இறந்திருப்பார் . வசந்தாவிற்கு எந்த செக்குபந்திக்கு உட்பட்ட சொத்து விற்கப்பட்டது என்றால் செக்குபந்தி விவரம் எனக்கு தெரியாது 1 ¾ ஏக்கர் விற்றக்கப்பட்டது. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு விற்கப்பட்டது என்றால் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு விற்கப்பட்டது. சாந்தி கல்லூரில் கடை வைப்பதற்கு முன்பு 4-ம் பிரதிவாதிக்கு நிலம் விற்கப்பட்டதா என்றால் ஆமாம், சாந்தி கல்லூருக்கு குடி வருவதற்கு முன்பே நிலம் விற்கப்பட்டது. வசந்தா கிரையம் வாங்கிய நிலத்தில் தற்போது என்ன செய்துள்ளார் என்றால் அவர் கிரையம் பெற்றதற்கு பிறகு மாஞ்செடி வைத்துள்ளார். வசந்தா கிரையம் பெற்ற கிரைய வியாபாரத்திற்கு நான் உடன் சென்றேனா என்றால் கேள்விபட்டேன் உடன் செல்லவில்லை. வியாபாரம் பேச யாரெல்லாம் உடன் சென்றார்கள் என்றால், அதெல்லாம் எனக்கு தெரியாது. வசந்தா கிரையம் பெற்ற பிறகு அதில் மாஞ்செடி வைத்துள்ளதை பொறுத்து வாதி வசந்தாவிடம் கேட்டாரா என்றால் கேட்டிருப்பார் எனக்கு அது பற்றி தெரியவில்லை. வசந்தா கிரையம் பெற்ற சொத்தில், சாந்திக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், எனது பங்காளி மாணிக்கம் கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாணிக்கம், வேலு, திருமால் ஆகியோர் அவர்களது குடும்ப செலவிற்காகவும், அவசரத்தேவைக்காகவும் தாவா சொத்தினை வசந்தாவிடம் விற்றுவிட்டார்கள் என்றால் அவர் பெண் பிள்ளைக்கும் கொடுத்துவிட்டு விற்றிருக்க வேண்டும், அது தவறாகும். சாந்தி தவறான உறவில் பிறந்தவர் என்பதால்தான் 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தில் தரப்பினராக சோக்கவில்லை என்றாலும், அதே போல சாந்தியை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. வசந்தாவிற்கு

விற்கப்பட்ட 1 ஏக்கர் 73 செண்ட் போக இன்னும் எவ்வளவு நிலம் மாணிக்கத்திடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள வாதி சாந்திக்கு வழக்கு சொத்தில் எந்த விதமான உரிமையும் இல்லை என்றாலும் மாணிக்கம் துாண்டுதலின் பேரில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் உறவினர் என்பதால் மாணிக்கம் கேட்டுகொண்டதன்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வசந்தா வேற்று சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும் அவர் வெளியூர்காரர் என்றாலும், அதனால் நான் அவருக்கு எதிராக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிவுற்றது.)